பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை-4

07 04 2024 12 40

ஞாயிற்றுக்கிழமை நண்பகல்

தலைப்புச் செய்திகள்

1. தமிழகத்தில் தேர்தல் பிரச்சாரம் நிறைவடைய 10 நாட்களே உள்ள நிலையில் அரசியல் கட்சித் தலைவர்களின் பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

2. நாடு முழுவதும் 11 கோடியே 40 லட்சம் வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக பிஜேபி தலைவர் திரு. ஜே.பி. நட்டா தெரிவித்துள்ளார்.

3. இளைஞர்களின் கனவுகளை நனவாக்க வேண்டும் என்பதே காங்கிரசின் நிலைப்பாடு என்று அக்கட்சியின் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி கூறியுள்ளார்.

4. உடல்நலம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், உலக சுகாதார தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

5. ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் இன்று நடைபெற உள்ள ஆட்டங்களில் மும்பை - தில்லியையும், குஜராத் - லக்னோவையும் எதிர்கொள்கின்றன.

----- *இனி விரிவான செய்திகள்* --

<<<<>>>>

நாடு முழுவதும் மக்களவைத் தேர்தலில் முதற்கட்ட வாக்குப்பதிவு நடைபறெ உள்ள 102 தொகுதிகளில் அரசியல் கட்சித் தலைவர்களின் பிரச்சாரம் விறுவிறுப்படைந்துள்ளது.

தமிழகத்தில் மொத்தமுள்ள 39 தொகுதிகளிலும், புதுச்சேரியிலும் வரும் 19ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளதால் சுட்டெரிக்கும் வெயிலையும் பொருட்படுத்தாமல் அரசியல் கட்சித் தலைவர்கள் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு. நரேந்திர மோடி மத்தியப்பிரதேச மாநிலத்தில் இன்று பிரச்சாரத்தை தொடங்குகிறார்.

ஜபல்பூரில் அவர் இன்று மாலை திறந்த வாகனத்தில் சென்று பிஜேபி வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்ட உள்ளார்.

சிதம்பரம் மக்களவைத் தொகுதியில் போட்டியிடும் பிஜேபி வேட்பாளர் திருமதி கார்த்திகாயினியை ஆதரித்து அக்கட்சியின் தேசிய தலைவர் திரு. ஜே.பி. நட்டா அரியலூர் மாவட்டம் கொல்லாபுரத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் வாக்கு சேகரித்தார்.

அப்போது பேசிய அவர், நாடு முழுவதும் 11 கோடியே 40 லட்சம் வீடுகளுக்கு குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக திரு. நட்டா தெரிவித்தார்.

காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி தமது சமூக வலைதளப் பதிவில், இளைஞர்களின் கனவுகளை நனவாக்க வேண்டும் என்பதே தங்கள் கட்சியின் உறுதிப்பாடு என்று குறிப்பிட்டுள்ளர்.

இளைஞர்களுக்கு தேசிய அளவிலான 5 ஆயிரம் கோடி ரூபாய் நிதியில் இருந்து ஸ்டார்ட்அப் நிதி வழங்கி அவர்களை தொழில்முனைவோராக்க காங்கிரஸ் உத்தரவாதம் அளிப்பதாகவும் திரு. ராகுல் காந்தி குறிப்பிட்டுள்ளார்.

தமிழகத்தில் தேர்தல் பிரச்சாரம் முடிவடைய 10 நாட்களே உள்ள நிலையில் அரசியல் கட்சித் தலைவர்களின் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

திமுக மற்றும் கூட்டணிக் கட்சிகளை ஆதரித்து திமுக தலைவரும் முதலமைச்சருமான திரு. மு.க. ஸ்டாலின், அஇஅதிமுக மற்றும் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி பழனிசாமி, பிஜேபி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து பிஜேபி மாநில தலைவர் திரு. அண்ணாமலை உள்ளிட்ட பலரும் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

<<<<>>>>

மக்களவைத் தேர்தல் அறிவிக்கப்பட்ட பின்னர் கடந்த 20 நாட்களில் **Suvida** இணையதளம் மூலம் 73 ஆயிரம் விண்ணப்பங்கள் வரப்பெற்றுள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தேர்தல் பேரணிகள், தற்காலிக தேர்தல் அலுவலகங்கள் திறப்பது, வீடு வீடாகச் சென்று ஆதரவு திரட்டுவது, வீடியோ வாகனங்கள், ஹெலிகாப்டர்கள் மற்றும் வாகனங்களுக்கான அனுமதி, துண்டுப்பிரசுரங்கள் வழங்குதல் போன்றவற்றுக்கு இந்த இணையதளத்தில் விண்ணப்பித்து அனுமதி பெற வகை செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் பிரச்சார காலத்தின் முக்கியத்துவத்தைக் கருத்தில்கொண்டு அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் கோரிக்கைகள் ஏற்கப்பட்டு வருவதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

முதலில் பதிவு செய்வோருக்கு முன்னுரிமை என்ற அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது.

அரசியல் கட்சிகள் மற்றும் வேட்பாளர்களின் கோரிக்கைகள் அடிப்படையில், 44 ஆயிரத்து 600 விண்ணப்பங்கள் ஏற்கப்பட்டுள்ளதாகவும், 11 ஆயிரத்து 200 விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதாகவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

தவிர 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட விண்ணப்பங்கள் தகுதியற்றவை என ரத்து செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகபட்சமாக தமிழ்நாட்டில் இருந்து 23 ஆயிரம் விண்ணப்பங்களும், அதற்கு அடுத்தபடியாக மேற்குவங்கத்தில் இருந்து 12 ஆயிரம் விண்ணப்பங்களும் பெறப்பட்டுள்ளன.

10 ஆயிரம் விண்ணப்பங்களுடன் மத்தியப்பிரதேசம் மூன்றாவது இடத்தில் உள்ளதாக தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

உலக சுகாதார தினம் இன்று கொண்டாடப்படுகிறது.

உலக அளவில் உடல்நலம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இந்த ஆண்டு ‘எனது உடல்நலம் – எனது உரிமை’ என்ற கருப்பொருளுடன் இந்த தினம் கொண்டாடப்படுகிறது.

உலக மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்ட மக்கள் உடல்நலக் குறைவுடன் காணப்படுவதால் அதனை போக்கும் வகையில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் நடத்தப்படுகின்றன.

140க்கும் மேற்பட்ட நாடுகள் தங்களது அரசியல் சட்டத்தில் உடல்நலம் என்பது மனித உரிமை என்பதை அங்கீகரித்திருப்பதாக உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.

உடல்நலத்தின் முக்கியத்துவத்தைக் கருத்தில் கொண்டு கடந்த 1950ஆம் ஆண்டு முதல் இந்த தினம் கடைபிடிக்கப்பட்டு வருகிறது.

<<<<>>>>

செயற்கை நுண்ணறிவு தகவல்களைப் பயன்படுத்தி இந்தியா, அமெரிக்கா மற்றும் தென்கொரியாவில் நடைபெற உள்ள தேர்தல்களை சீர்குலைக்க சீனா முயன்று வருவதாக மைக்ரோசாஃப்ட் நிறுவனம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

அண்மையில் நடைபெற்ற தைவான் அதிபர் தேர்தலின்போது முடிவுகள் வெளியாவதில் செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சீனா சோதனை மேற்கொண்டதை மைக்ரோசாஃப்ட் நிறுவனம் சுட்டிக்காட்டியுள்ளது.

இந்த ஆண்டில் ஐரோப்பிய யூனியன் உட்பட 64 நாடுகளில் தேர்தல் நடைபெற உள்ளது.

உலக மக்கள் தொகையில் 49 சதவீதம் பேர் இந்த நாடுகளில் தங்களின் தேர்தலை எதிர்கொள்ள இருக்கும் நிலையில் சீனா இதுபோன்ற இடையூறை ஏற்படுத்த திட்டமிட்டிருப்பதாக மைக்ரோசாஃப்ட் நிறுவனத்தின் குழுவினர் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

சமூக வலைதளங்கள் மூலமாக சீனா தங்கள் நலனுக்கு ஏற்றவாறு பொதுமக்கள் கருத்தாக செயற்கை நுண்ணறிவு தகவல்களை பரப்ப திட்டமிட்டிருப்பதாகவும் அந்த நிறுவனம் வெளியிட்ட எச்சரிக்கை தகவல் தெரிவிக்கிறது.

<<<<>>>>

கலாச்சாரம் மற்றும் இயற்கை கொண்டாட்டங்களின் தொடக்கமாக பேரீட்சம் பூ திருவிழா லடாக்கின் கார்கில் மாவட்டத்தில் தொடங்கியுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் இந்த சீசனில் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் கார்கில் சுற்றுலாத்துறை சார்பில் இந்தத் திருவிழா கொண்டாடப்பட்டு வருகிறது.

வரும் 18ஆம் தேதி வரை நடைபெற உள்ள இந்த விழாவில் பாரம்பரிய உணவு வகைகள், கலாச்சார நிகழ்ச்சிகள், லடாக்கின் பாரம்பரிய நடனம் மற்றும் பேரீட்சம் பழத்திலான விதவிதமான உணவு வகைகள் இடம்பெறும்.

இந்த விழாவைக் காணவும், லடாக்கின் அழகைக் கண்டு ரசிக்கவும் ஆண்டுதோறும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் அங்கு வருகைதருவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

<<<<>>>>

சம அளவிலான வளர்ச்சி தொடர்பான பரிமாற்றங்கள் குறித்து பேச்சு நடத்த அமெரிக்காவும் - சீனாவும் ஒப்புக்கொண்டுள்ளன.

சீனாவின் பொருளாதார மாதிரி, உள்நாட்டு மற்றும் உலகளாவிய பொருளாதார வளர்ச்சி, நிதி முறைகேடுகளுக்கு எதிரான முயற்சிகள் உள்ளிட்ட விஷயங்கள் குறித்து பேச்சு நடத்த இருதரப்பும் ஒப்புக்கொண்டிருப்பதாக அமெரிக்க பொருளாதார அமைச்சகம் வெளியிட்ட அறிக்கை தெரிவிக்கிறது.

அமெரிக்க அமைச்சர் **Janet Yellen** அரசுமுறைப் பயணமாக சீனா சென்றுள்ள நிலையில் இந்த பேச்சுவார்த்தைக்கு சம்மதம் தெரிவிக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

**<<<<>>>>**

ஐபிஎல் கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்று இரண்டு ஆட்டங்கள் நடைபெறுகின்றன.

பிற்பகல் மணி 3.30க்கு தொடங்கும் முதல் ஆட்டத்தில் மும்பை அணி – தில்லி அணியை எதிர்கொள்கிறது.

இரவு ஏழரை மணிக்கு நடைபெற உள்ள மற்றொரு போட்டியில் குஜராத் அணி - லக்னோ அணியை எதிர்கொள்கிறது.

-------------

இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையேயான ஆடவர் ஹாக்கி தொடரின் இரண்டாவது போட்டி பெர்த்தில் இன்று நடைபெறுகிறது.

இப்போட்டி பிற்பகல் மணி 2.10க்கு தொடங்க உள்ளது.

முன்னதாக நேற்று நடைபெற்ற முதல் ஆட்டத்தில் இந்தியாவை, ஆஸ்திரேலியா 5-1 என்ற கோல் கணக்கில் வென்றது.

**<<<<The End>>>>**